# இனியவை நாற்பது காட்டும் அறம் மற்றும் வாழ்வியல் விழுமியங்கள்

***முனைவர் க. கலாகோபி***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7710

## முன்னுரை

களப்பிரர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய காலம் முதல் சங்கம் மருவிய காலம் தொடங்குகிறது. களப்பிரர்கள் ஆட்சியால் தமிழர் நாகரிகத்தில் ஒருவகையான மாற்றம் ஏற்பட்டது. மக்கள் எந்தவொரு நன்னெறிக் கொள்கைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படியும் வாழலாம் என்றிருந்தனர். இந்த நிலை தவறானது என்று கருதி, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்கியது பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். அதில் இனியவை நாற்பதும் ஒன்றாகும். இனியவைநாற்பதின் ஆசிரியர் பூதஞ்சேந்தனார் ஆவார். இவரது காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு ஆகும். இவரது பாடல்களில் மக்கள் அறத்துடன் வாழ்வதற்கும், வாழ்வியல் விழுமியங்களைக் கடைப்பிடிப்பதற்குரிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அதனை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## அறம்

இந்தியப் பண்பாட்டுத் தளத்தில் அடிப்படையாக தர்மம் என்ற சொல் வழங்கப்படுகிறது. தர்மம் என்னும் சொல்லுக்கு தமிழில் அறம் என்ற சொல்லை வழங்குகின்றோம். நிலை நிறுத்தப்பட்ட மனித கடமைகளை வலியுறுத்துவதே அறம் என்று அ. சீனிவாசன் கூறியுள்ளார். மதம், மரபு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, நடைமுறைச் செயற்பாடுகள், நீதிநெறிமுறை, குணச்சிறப்புக்கள், குணத்தன்மைகள், சமுதாய ஒழுக்க நெறிமுறைகள் இன்னும் பல வேறுபட்ட கடமைகள் முதலிய பலவும் அறம் என்னும் சொல்லில் அடங்கும்.

**"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்"**

***(மணி. பா.எ.3.13-15)***

என்று அறத்திற்கு சிறந்ததோர் உதாரணம் மணிமேகலை குறிப்பிட்டுள்ளது.

தனக்கும், உலகிற்கும் நன்மை தரும் பொருட்டு, தீமை தராத வழியில் சென்று பொருள் ஈட்டி இன்பம் அனுபவிப்பதும், பிறருக்கு உதவுவதும், ஒரு சாதாரண குடிமகனுக்குக் கிடைக்கக் கூடிய அடிப்படை வசதிகளைப் பெற்று வாழ்வதும் அறமாகும்.

**செங்கோண்மை**

மன்னன் மக்களின் நிலையறிந்து, நீதி நெறியிலிருந்து சிறிதும் வழுவாமல் நடுநிலைமையோடு, ஆட்சி செய்வதே செங்கோண்மை ஆகும். மனுநீதிச் சோழனின் மகன் பசுவின் கன்றைக் கொன்றதற்காகப் பசு நீதி கேட்டது. அதற்காகத் தன் மகனென்றும் பாராமல் தேர்க்காலில் கிடத்தி தானே கொன்று நீதியை நிலைநாட்டிய சோழன் வாழ்ந்த மண் இது. அன்று அவர் நடுநிலைமையோடு இருந்ததாலேயே அவரது புகழ் இன்றளவும் நிலை பெற்றிருக்கின்றது. இத்தகைய செங்கோண்மையைபூதஞ்சேந்தனார் பின்வருமாறு கூறுகிறார்.

**"கோல்கோடி மாராயம் செய்யாமை முன்இனிது**
**செங்கோலன் ஆகுதல் எய்தும் திறத்தால் இனிதென்ப"**

***(இனி.நா.பா.எ.5)***

என்ற பாடலில் மன்னன் நடுவுநிலைமை தவறி தன்னிடம் நடந்துகொள்ளும் மக்களுக்கும் அமைச்சர்களுக்கும் தண்டனை வழங்குவது சிறப்பாகும். நீதி வழங்கும் மன்னன் செங்கோலனாக இருப்பது மக்கள் அனைவருக்கும் நன்மை தருவதாக அமையும் என்று கூறுகிறது.

**போரைத் தவிர்த்தல்**

**"யாரொடும்பகை கொள்ளலன்-என்றபின்**
**போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது"**

***(கவிமணி பாடல். ப.56)***

என்னும் கவிமணியின் வாக்கிற்கேற்ப எல்லோருடனும் அன்பாகப் பழகினால் பகைக்கு இடமில்லை. இதனை பூதஞ்சேந்தனாரும் வலியுறுத்துகிறார்.

**"வாள்மயங்கு மண்டமருள் மாறாத மாமன்னர்**
**தானை தடுத்தல் இனிது"**

***(இனி.நா.பா.எ.33)***

என்ற பாடலில், சமாதானமாகப் பேசி போரைத்தவிர்த்தல் கோழைத்தனம் அல்ல, புத்திசாலித்தனம். இதனால் நாட்டின் வளமும் குறையாது. மக்களும் இன்பமாக வாழ்வர் என்று குறிப்பிடுகிறார். இதனையே மேலும் ஒரு பாடலில் உறவினர்களுடன் அன்போடு வாழ்வது இனிமையானது என்றும் கூறியுள்ளார்.

**இனியவை நாற்பது சுட்டும் வாழ்வியல்**

கணவன் மனைவியின் உள்ளங்கள் வேறுபாடின்றி ஒன்று பட்டிருந்தால் இல்வாழ்க்கை இனியதாய் இருக்கும். அத்தகையவர் மிக மகிழ்ச்சியாக வாழ்வர். ஒத்த அன்புடைய தம்பதிகளின் வாழ்க்கை சொர்க்கமாய் அமையும். அவ்வாறு அமையாவிடில் இளமை, யாக்கை முதலியவற்றின் நிலையாமையை ஆராய்ந்து அகம்புறம் ஆகிய பற்றுக்களை விட்டுவிடுவது இனிமை பயக்கும் என்று சுட்டுகின்றது. மேலும் மறுதிருமணம் பற்றி எதுவும் இனியவை நாற்பதில் கூறவில்லை. இல்லறம் இல்லையெனில் துறவறம் என்றே இனியவை நாற்பது கூறுகிறது. மனைவியானவள் கற்பு மாட்சி இல்லாதவளாய் இருந்தால் அவளை நீங்கி விடுதல் இனிது என்பதை,

**"நிறை மாண்பில் பெண்டிரை நீங்கல் இனிதே"**

***(இனி.நா.பா.எ. -10)***

என்ற பாடலடி விளக்குகிறது.

**அன்புடையராய் இருத்தல்**

குற்றமில்லாத நடத்தை உடையவராய் இருந்து பிறரிடம் அன்புடையவராய் இருத்தல் நலம் பயக்கும் என்பதனை,

**"பங்கமில் செய்கையராகிப் பிரித்து யார்க்கும்**
**அன்புடையராதல் இனிது"**

***(இனி.நா.பா.எ.9)***

என்ற பாடல் வரிகளின் வழி அறியலாம்.

குற்றங்கள் செய்துகொண்டு பிறரிடம் அன்புடையவராய் நடிப்பது நீண்ட நாளைக்கு நிலைக்காது. எனவே குற்றமில்லாத நடத்தையுடன் இருந்து, "பிறரிடம் எப்பொழுதும் அன்பை செலுத்தி அன்பையே பெறுங்கள்" என்று இனியவை நாற்பது எடுத்துரைக்கின்றது.

### இனியவை நாற்பதில் ஈகை

குறைவில்லாத பெருஞ்செல்வத்தை உடையவன் அதனைத்த தக்கவர்க்குத் கொடுத்தல் இயலாது. பொருள் உடையவர்க்குக் கொடுப்பதில் பயனில்லை. எனவேதான் தக்கவர்க்கு அதாவது பொருள் இல்லாதவர்க்குக் கொடுப்பதே சிறப்பு என்கிறது இனியவை நாற்பது. இதனை,

**"உடையான் வழக்கினி"**

***(இனி.நா.பா.எ. 2)***

**"முட்டில் வரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது தகிகுழி ஈதல் இனிது"**

***(இனி.நா.பா.எ.19)***

என்ற அடிகள் மேற்கூறிய கருத்தினைத் தெளிவு செய்கின்றன. மேலும் தன்னால் இயன்ற அளவு பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும் என்பதை,

**"ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே"**

***(இனி.நா.பா.எ.6)***

என்ற பாடல்வரி கூறுகிறது.

### கல்வியின் தேவை

ஒருவனிடம் கல்வி கற்பதற்குப் போதிய வசதி இல்லாதபோது அவன் பிச்சை எடுத்தாயினும் கல்வி கற்க வேண்டும். அக்கல்வி அவன் கற்றவர் சபையில் அமர்ந்திருக்கும் போது அவனுக்கு உதவும். அப்போது அவன் கற்ற கல்வி அவனுக்கு இனிமை தரும் என்பதை,

**"பிச்சைப்புக் காயினும் கற்றல் மிக இனிதே நாற்சபையில் கைகொடுத்தல் சாலவும் முன் இனிதே"**

***(இனி.நா.பா.எ.1)***

என்ற பாடல் அடிகள் வழி அறியலாம்.

### நூல்களைக் கற்கும் முறை

**"பற்பல நாளும் பழுதினறியக்குடைய கற்றலிற் காழினியாக இல்"**

***(இனி.நா.பா.எ.40)***

என்ற பாடல் மூலம் ஒவ்வொரு நாளும் கற்க வேண்டும். அவ்வாறு கற்பது இனிமை தரும் என்கிறது இனியவைநாற்பது. கல்வி கற்பவன் குற்றம் செய்யக் கூடாது. அவ்வாறு குற்றம் எதுவும் புரியாமல் கல்வி கற்பது கற்பவனுக்கும் கல்விக்கும் இனிமை தரும் என்கிறார். இதனை,

**"நாளும் நவைபோகான் கற்றல் மிக இனிது"**

***(இனி.நா.பா.எ.3)***

என்ற பாடல் அடி மூலமும் அறியலாம்.

### நட்பின் சிறப்பு

நட்பு என்பது இருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சார்ந்து அமைவதே சிறந்த நட்பாகும். கருத்தொற்றுமையுடன் கூடி இருப்பவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இருந்தால் அதுவே நல்ல நட்பிற்கு அடிப்படையாய் அமைவதாகும். நட்பின்சிறப்பினை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலுள்ள திருக்குறள், நாலடியார், இனியவை நாற்பது போன்ற நூல்களில் சிறப்பினை அறியமுடிகின்றது. சான்றாக, நாலடியாரில் ஒருவரிடம் நட்புகொள்ளும் போது ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டும். உயர்ந்தவர்கள் சேய்மையில் இருந்தாலும் அவர்கள் நட்பை பெற முற்படவேண்டும். அத்தகைய பெரியோர்கள் அண்மையில் இருந்தும் நட்பு கொள்ளத் தெரியாதவர்கள் கீழோரின் நட்பு கொள்ளத்தக்கதாகும். மேலும், சிறியவர்களிடம் கொண்ட நட்பானது காலை நேரத்து நிழல் போல வரவரக் குறையும் தன்மையுடையது. அதேநேரம் பெரியவரிடம் கொண்ட நட்பானது அவ்வாறு குறையாமல் மாலைநேரத்து நிழல் போல வளர்ந்து வரும் தன்மையுடையது என்பதை,

**"நளிகடல் தண்சேர்ப்ப நாணிழல் போல
விளியும் சிறியவர் கேண்மை – விளிவின்றி
அல்கு நிழல்போல் அகன்றகன்று ஒருமே
தொல்புகழளர் தொடர்பு"**

***(நாலடியார். 56)***

என்ற நாலடியார் பாடலில் நட்பின் சிறப்பினை அறியமுடிகின்றது. மேலும், இனியவை நாற்பதில், நாம் செல்லும் திசையில் எல்லாம் நல்லவர்களை நட்பாய் கொள்வது இனிமை பயக்கும் என்பதை,

**"தேரிகோள்நட்பு திசைக்கு"**

***(இனி.நா.பா.எ.4)***

என்ற பாடலடி விளக்குகிறது. மேலும் திருக்குறளில் நட்பின் சிறப்பினை,

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"**

***(குறள்.)***

என்ற குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

### தீயநட்புக் கூடாது

தீயவர்கள் வலிய தாமாகவே வந்து நம்முடன் பொருத்தி நட்புக் கொள்ளினும் அவர்களுடன் நட்புக் கொள்ளாமல் நீங்கிவிடுவது இனிது, இதனை

**"புல்லிக்கொளினும் பொருளிலார் தங்கேண்மை
கொள்ளலார் விடுதல் இனிது"**

***(இனி.நா.பா.எ.34)***

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

தீயவருடன் சேர்ந்தால் அவரிடம் உள்ள தீய குணம் நமக்கும் வரும் அன்றோ. எனவே தான் தீயநட்புக் கூடாது என்கிறது இனியவை நாற்பது.

### உண்மையே பேச வேண்டும்

**"பட்டாங்கு பேணிப் பணிந்தொழுதல்
முன் இனிது"**

***(இனி.நா.பா.எ.19)***

என்ற பாடல் அடி மூலம் ஒருவன் உண்மையே பேசி அதன்படி வாழ்ந்து வருவது இனிமை பயக்கும் என்கிறது இனியவை நாற்பது. அனைத்து மதங்களும் உண்மையே பேச வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்துக்கின்றது.

### பிறர் பொருளைக் கவரக் கூடாது

அனைத்து மதங்களும் "பிறர் பொருளைத் திருடக்கூடாது" என்றக் கருத்தை வலியுறுத்து கின்றன. இனியவை நாற்பதிலும்,

**"பிறன்கைப் பொருள் வெளவான்
வாழ்தல் இனிதே"**

***(இனி.நா.பா.எ.21)***

என்ற பாடலடி மூலம் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

### புறங்கூறல் கூடாது

தன்னிடம் நட்பு கொண்டு நண்பராய் இருப்பவரைப் பற்றி அடுத்தவரிடம் தவறாகக் கூறக் கூடாது. இதனை,

**"நாட்டார் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே"**

***(இனி.நா.பா.எ. 19)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகின்றது.

### இனியவை நாற்பது கூறும் பிற விழுமியங்கள்

1) மனிதன் கோபம் கொள்ளக்கூடாது (இனி.நா.பா.எ.15) 2) பொறாமை கொள்ளக்கூடாது (இனி.நா.பா.எ.36). 3) மானத்துடன் வாழ்தல் வேண்டும் (இனி.நா.பா.எ. 27). 4) தாய், தந்தையரைத் தொழ வேண்டும் (இனி.நா.பா.எ.15). 5) இரவுவழி நடத்தல் கூடாது (இனி.நா. பா.எ.34). 6) வஞ்சகருடன் சேரக்கூடாது (இனி.நா.பா.எ.20) போன்ற சிறந்த வாழ்வியல் விழுமியங்களையும் இனியவை நாற்பது கூறுகிறது.

### முடிவுரை

இனியவை நாற்பது மனிதனை மனிதனாக வாழவழி கூறுகிறது. நாளைய தலைவர்களாகிய இன்றைய இளம் தலைமுறைகளும் இனியவை நாற்பதில் உள்ள அரசியல் அறக்கருத்துக்களைப் பின்பற்றி தன்னலமற்ற

ஒற்றுமையான பலமான பாரதத்தை உருவாக்க முடியும். மேலும், இனியவை நாற்பது கூறும் நாற்பது பாடல்களின் வழி ஒவ்வொரு மனிதனும் நடந்தால் உலகம் சமாதானப் பாதையில் மட்டுமே நடைபோடும் என்பது திண்ணம்.

**துணைநூற்பட்டியல்**


1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், கௌரா வெளியீடு, முதற்பதிப்பு 2010.
2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் உரையுடன், ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2011
3. ஐம்பெருங்காப்பியம் மணிமேகலை - கௌரா வெளியீடு - முதற்பதிப்பு 2006
4. திருக்குறள் - நாமக்கல் கவிஞர் உரை - பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.